**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 08 /2019**

வாதி தரப்பு சாட்சியாக DW 3 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Father Name | : | முனியாண்டி |
| Village | : | கோவில்பத்து | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 63 |

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண், நான்கெல்லை விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துகளுக்கான சர்வே எண் மற்றும் நான்கெல்லை விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கு பங்காளி முறை என்பதை வேண்டுமென்றே மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் ரோட்டுக்கு அடுத்து தென்புறத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி என்பவரின் குடும்பத்தினரால் நீண்டகாலமாக வண்டி மாடு வைத்தும், வைக்கோல் போர் போட்டும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள் என்று நான் சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. அன்னைபிரகாஷ் குடும்பத்தினர் ரோட்டுக்கு தென்புறம் உள்ள இடத்தை எக்காலமும் அனுபவம் செய்தது இல்லை என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்

எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும்தான் உள்ளது என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.02.11 17:08:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.